இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 25.04.2026

# சி.பி.ஆரின் இலங்கை நாடகம்!

தமிழ்நாட்டில் தேர்தல் நடக்கும் போது, இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் மாண்புமிகு சி.பி.ராதா கிருஷ்ணன் அவர்கள் இலங்கையில் இருந்தார்கள். ‘பார்த்தீர்களா? நாங்கள் இலங்கைத் தமிழர்க்கு நன்மை செய்கிறோம்’ என்று காட்டுவதற்கான பா.ஜ.க.வின் இலங்கை நாடகம்தான் இது.

துணைக் குடியரசுத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்கள் இலங்கை செல்கிறார் என்றதும், கச்சத்தீவை மீட்கப் போகிறாரோ? இலங்கைத் தமிழர்களின் உரிமையை நிலைநாட்டப் போகிறாரோ? தினமும் இலங்கை கடற்படையால் தாக்குதலுக்கு உள்ளாகும் இந்திய மீனவர்களைக் காக்கப் போகிறாரோ? - என்பது போன்ற ஆர்வம் ஏற்பட்டது. இதெல்லாம் இல்லை என்பதை மாண்புமிகு சி.பி.ஆரின் பயணம் உணர்த்தி விட்டது.

மாண்புமிகு சி.பி.ராதாகிருஷ்ணன் இலங்கை செல்வதற்கு முன்னதாக ‘தினமணி’ நாளிதழ் (19.4.2026) ஒரு சிறப்புக் கட்டுரையை வெளியிட்டது. ‘இருதரப்பு உறவின் புதிய அத்தியாயம்’ என்று அதற்கு தலைப்பு போட்டுள்ளது. “இலங்கைத் தமிழர்கள் கோரி வரும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமல்படுத்துதல், இலங்கை மாகாணத் தேர்தல்களை நடத்துதல் ஆகிய பிரச்சினைகளை இலங்கைத் தலைவர்களிடம் சி.பி. ராதாகிருஷ்ணன் எடுத்துரைக்கத் திட்டமிட்டு இருப்பதாக அறிய முடிகிறது” என்கிறது அந்தக் கட்டுரை. இலங்கைத் தமிழர்கள் கோரி வரும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமல்படுத்துங்கள் என்று மாண்புமிகு சி.பி.ஆர்.அவர்கள், அங்கு இலங்கை குடியரசுத் தலைவரிடமோ, பிரதமரிடமோ கோரிக்கை வைத்தாரா என்றால் இல்லை.

இலங்கை அதிபர் அநுர குமார திசாநாயகாவை, மாண்புமிகு சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் ஏப்ரல் 20ஆம் தேதி சந்தித்துள்ளார். அது குறித்து ‘தினமணி’ வெளியிட்டுள்ள செய்தியில், இலங்கைத் தமிழர்கள் கோரி வரும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் பற்றிய எந்தத் தகவலும் இல்லை. இந்தியாவின் சார்பில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டு வசதித் திட்டங்கள் பற்றித்தான் அவர்கள் பேசி இருக்கிறார்கள். பல்வேறு உதவிகளை இலங்கைக்கு இந்தியா செய்யப் போகிறது. அதைப் பற்றித்தான் இவர்கள் பேசி இருக்கிறார்கள்.

‘மீனவர் பிரச்சினை பற்றியும் பேசினார்கள்’ என்று அந்த செய்திக் குறிப்பு சொல்கிறதே தவிர, என்ன பேசினார்கள் என்பது இல்லை. ‘இனியொரு இந்திய மீனவர், இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்படக் கூடாது’ என்று மாண்புமிகு சி.பி.ஆர்.அவர்கள் சொன்னதாக தகவல் இல்லை.

இலங்கை பிரதமர் ஹரிணி அமர சூர்யாவை, மாண்புமிகு சி.பி.ஆர். அவர்கள் சந்தித்துள்ளார்கள். அவரிடமாவது இலங்கைத் தமிழர்கள் கோரி வரும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் பற்றிப் பேசினாரா என்றால் இல்லை. கலாச்சார, பாரம்பரிய உறவின் முக்கியத்துவத்தைத்தான் இருவரும் பகிர்ந்து கொண்டதாக செய்திக்குறிப்பு சொல்கிறது.

**2024 ஏப்ரல் மாதத்தில் கச்சத்தீவை மீட்பது பற்றி பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனும் என்னவெல்லாம் பேசினார்கள். ‘காங்கிரஸ் ஆட்சிதான் கச்சத்தீவை தாரை வார்த்தது’ என்று குற்றம் சாட்டினார்களே. அந்தக் கச்சத்தீவை பா.ஜ.க. மீட்டுத் தருமா? மீட்க வேண்டாம். ஒரு கோரிக்கையாவது இலங்கை அரசாங்கத்திடம் வைப்பதற்கு இவர்களுக்கு துணிச்சல் இருக்கிறதா? துணிச்சல் வேண்டாம். அக்கறையாவது உண்டா?**

“கச்சத்தீவு கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்காக இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைகின்றனர். அவர்கள் மீன் வளங்களைக் கொள்ளையடிப்பதோடு கடல் தாவரங்களையும் கடுமையாகச் சேதப்படுத்துகின்றனர். சர்வதேச சட்டங்களின்படி நிறுவப்பட்ட கச்சத்தீவை ஒருபோதும் விட்டுத் தர மாட்டோம். இந்தியாவில் காங்கிரஸ், பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் அரசியல் காரணங்களுக்காகவே கச்சத்தீவு விவகாரத்தை எழுப்புகின்றன” என்று வாய்க்கு வந்ததை எல்லாம் பேசினார் இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் விஜிதா ஹெராத். இது பற்றி மாண்புமிகு சி.பி.ஆருக்கு யாராவது நினைவூட்டினார்களா?

பிரதமர் மோடி இலங்கை சென்ற போதும் அதைப் பற்றிப் பேசவில்லை. இப்போது மாண்புமிகு சி.பி.ஆரும் இது பற்றிப் பேசவில்லை. மறந்துவிட்டார்களா?

**இந்திய மற்றும் நடுக்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் தொடர்ந்து இலங்கை அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டும் வருகிறார்கள். அவர்கள் படகுகள் சேதப்படுத்தப்படுகின்றன. உடைக்கப்படுகின்றன. மீன் பிடி வலைகள் அறுக்கப்படுகிறது. பல நேரங்களில் உயிர்க் கொலைகள் நடத்தப்படுகிறது. லட்சக்கணக்கில் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. பல மாதங்கள் இலங்கைச் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். இதனைத் தடுப்பதற்கு இந்திய அரசாங்கம் என்ன செய்தது? இலங்கை சென்ற இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் இதற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்க வேண்டாமா? அதுவும் ‘தமிழர்’ பேசி இருக்க வேண்டாமா?**

குடியுரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்தது பா.ஜ.க. அரசு. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசத்தைச் சேர்ந்தவர்கள் வரலாம் என்றும், அந்த நாட்டைச் சேர்ந்த இசுலாமியர்கள் நீங்கலாக மற்ற மதத்தைச் சேர்ந்தவர்கள் வரலாம் என்றும் சொன்னார்கள். பாகிஸ்தானில் இருந்து, வங்க தேசத்தில் இருந்து, ஆப்கானிஸ்தானத்தில் இருந்து இசுலாமியர் நீங்கலான மற்ற மதத்தவர்கள் வரலாம் என்றால் அண்டை நாடான இலங்கையைச் சேர்ந்தவர்கள் வரலாமா? என்றால் வரக்கூடாது என்பதைத் தடை செய்த சட்டம் அது.

**அண்டை நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு குடியுரிமை வழங்குகிறோம் என்றால் இலங்கையைச் சேர்த்திருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை. மற்ற அண்டை நாட்டைச் சேர்ந்த இந்துக்கள் வரலாம் என்றால் இலங்கையில் இருக்கும் தமிழர்களை இந்துக்களாக பா.ஜ.க. அரசு அங்கீகரிக்கவில்லை. இப்படி இலங்கைத் தமிழர்களுக்கு துரோகம் இழைத்ததுதான் ஒன்றிய பா.ஜ.க. அரசு ஆகும்.**

**எனவேதான், மாண்புமிகு சி.பி.ஆரின் இலங்கைப் பயணம் என்பது தமிழ்நாட்டில் தேர்தல் நடக்கும் போது பா.ஜ.க. நடத்தும் ஒரு அரசியல் நாடகமாகவே அமைந்துள்ளது.**



(நினைவில் வாழும்) முரசொலி செல்வம் அவர்களின் பிறந்த நாளான நேற்று (24.04.2026), கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை – கோடம்பாக்கம் ‘முரசொலி’ அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும் – திருவுருவப்படத்திற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தினார். சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் கே. இராஜமாணிக்கம், இ.ஆ.ப. (ஓய்வு), ‘முரசொலி’ பொது மேலாளர் ஆர். இராஜசேகரன், ‘முரசொலி’ செய்தி ஆசிரியர்கள் கே.சேது, இள. மதியழகன், ‘முரசொலி’ துணை ஆசிரியர் மு. முத்தையா, ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் ஆகியோர் உடன் உள்ளார்கள்.



முரசொலி செல்வம் அவர்களின் பிறந்த நாளையொட்டி, ‘முரசொலி’ அலுவலக வளாகத்தில் உள்ள அவரது திருவுருவப் படத்திற்கு இயக்குநர் அமிர்தம் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



முரசொலி செல்வம் அவர்களின் பிறந்த நாளையொட்டி, ‘முரசொலி’ அலுவலக வளாகத்தில் உள்ள அவரது சிலைக்கு மு.க.தமிழரசு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீது தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் நன்மதிப்பு அதிகரிப்பு

## தி.மு.க. ஆட்சி தொடரவே மக்கள் விரும்புகின்றனர்!

### தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப் பெருந்தகை பேட்டி!

சென்னை, ஏப். 25 -

தனது வீட்டில் சோதனை எதுவும் நடத்தவில்லை என வருமான வரித்துறை கூறுவது அப்பட்டமான பொய் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை குற்றம்சாட்டியுள்ளார். சென்னை சத்தியமூர்த்தி பவனில் செய்தியாளர்களிடம் பேசிய செல்வப்பெருந்தகை, தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மகத்தான வெற்றியை பெறும் என்று தெரிவித்தார். முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மீது தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் நன்மதிப்பு அதிகரித்துள்ளது என்றும், தி.மு.க. ஆட்சி தொட



ரவே மக்கள் விரும்புகின்றனர் என்றும் அவர் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், தனது வீட்டில் வருமான வரித் துறை சோதனை நடத்தப்பட்டது உண்மைதான் என ஆதாரங்களை காட்டி உறுதிபடுத்தினார். சோதனை நடத்தவில்லை என வருமான வரித்துறை கூறுவது அப்பட்டமான பொய் டெல்லியின் உத்தரவுக்கு பணிந்து வருமான வரித்துறை சோதனை நடத்தியது எனவும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை குற்றம் சாட்டினார்.

தொடர்ந்து பேசிய செல்வப்பெருந்தகை, டெல்லியின் உத்தரவுக்கு பணிந்து தனது வீட்டில் சோதனை செய்து விட்டு, தற்போது சோதனை நடத்தவில்லை என வருமான வரித்துறை கூறுவது அப்பட்டமான பொய் என்று கண்டனம் தெரிவித்தார்.

மேலும், வருமான வரித் துறை சோதனை நடைபெற்றதற்கான வீடியோ மற்றும் புகைப்பட ஆதாரங்களையும் அவர் வெளியிட்டார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களை நேற்று (24.04.2026) கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் -

## தி.மு.க. அரசு - அடுத்த 5 ஆண்டுகளுக்கும் தொடரும்!

### கண்டனூரில் வாக்களித்தபின் – ப.சிதம்பரம் எம்.பி. பேட்டி!

காரைக்குடி, ஏப்.25-

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே கண்டனூரில் உள்ள சிட்டாள் ஆச்சி பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் நேற்று முன்தினம் காலை முதல் நபராக முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் வாக்களித்தார்.

பின்னர், அவர் அளித்த பேட்டி வருமாறு:-

தமிழ்நாட்டில் ஒரு நிலை



யான அரசு வேண்டும். வளர்ச்சி வேண்டும். மக்கள் நலத் திட்டங்கள் வேண்டும். இந்த மூன்று எதிர்பார்ப்புகள் தான் மாநிலம் முழுவதும் எதிரொலிக்கிறது. இந்த மூன்றையும் கடந்த முறை அளித்த திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அரசு, அடுத்த 5 ஆண்டுகளுக்கும் தொடரும் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழ்நாட்டில் வரக்கூடிய அரசுக்கு பட்ஜெட் போடுவதில் எந்தச் சிக்கலும் இருக்காது. அமைச்சர்கள் இருக்கிறார்கள், திறன் மிகுந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். வரவு செலவு கணக்கு போடும்போது மாநிலத்தின் சொந்த வருவாய், ஒன்றிய அரசின் வருவாய் ஆகிய இரண்டையும் கணக்கில் கொண்டு செயல்பட வேண்டும். இது ஒன்றிய அரசுக்கும் பொருந்தும், மாநில அரசுக்கும் பொருந்தும். ஒரு நிலையான அரசு, வலிமையான அரசு உறுதியான வரவு செலவு அறிக்கையை அளிக்கும். மாநிலத்தின் வளர்ச்சி திட்டப்பணிகளுக்கு அதிகளவு கடன் பெறப்படுகிறதே என்கிறீர்கள்.

ஒன்றிய அரசுக்கு எவ்வளவு கடன் உள்ளது? கடன் பெறுவதில் தப்பில்லை. தமிழ்நாடு மட்டும் கடன் வாங்கவில்லை. அனைத்து நாடுகளும் கடன் வாங்குகின்றன. மாநில அரசின் இலவச திட்டங்கள் குறித்து விமர்சனம் எழுந்துள்ளதே என்கிறீர்கள். இலவச திட்டங்களால் மாநிலத்துக்கு எந்த சிக்கலும் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.